




தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வேலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்டார்கள். அங்கிருந்த நீச்சல் குளத்தைப் பார்வையிட்டு வீரர்கள், வீராங்கனைகளுடன் கலந்துரையாடினர். மேலும் ரூ.10.81 கோடி மதிப்பில் அங்கு கட்டப்பட்டு வரும் புதிய விளையாட்டு உள் அரங்கைப் பார்வையிட்டு அதன் பணிகளை விரைந்து முடிக்க வலியுறுத்தினர். மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.






மக்கள் நலன் காக்க அவர்களின் தேவை அறிந்து உதவி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிடமாடல் அரசின் ஒரு பகுதியாக ஜோலார்பேட்டையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், திருப்பத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள், விவசாயிகள், மகளிர், மாணவச் செல்வங்கள் என மொத்தம் 14,253 பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.73.96 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி, கதிர்ஆனந்த் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, வில்வநாதன் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்,






இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். காட்பாடி, சேனூர் கிராமத்தைச் சேர்ந்த புண்ணியக்கோடி, பாம்புக்கடியால் பாதிக்கப்பட்ட இருங்கூரைச் சேர்ந்த லட்சுமணன் உட்பட அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு இருந்த நோயாளிகள் அவர்களது உறவினர்களிடம் நலம் விசாரித்து அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்று வருவோருக்கு கழக அரசின் முன்னோடி மருத்துவ திட்டமான, “இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48” திட்டத்தின் கீழ் முறையாக சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறையின் செயலாளர் தாரேஸ் அகமது மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.